# DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )

O.S. No.289/2019

****

| | |
|---|---|
| Deposition of Witness for | : CW1 |
| Name | : அண்ணாமலை |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.11.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் இளநிலை கட்டளைப் பணியாளராக பணியாற்றி வருகிறேன். இன்று 14.11.2019 ஆம் தேதி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற பணிகளை கவனிப்பதற்காக எனக்கு பணி ஒதுக்கப்பட்டிருந்தது. காலையில் வழக்குகள் அழைக்கப்பட்ட போது அ.வ.எண்.289/2019 வழக்கு அழைக்கப்பட்டது. அந்த வழக்கில் பிரதிவாதி முனியம்மாள் என்பவருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டிருந்ததால், அவரை திறந்த நீதிமன்றத்தில் அழைக்க சார்பு நீதிபதி ஐயா அவர்கள் உத்தரவிட்டார். உத்தரவின் பேரில் நான் மேற்படி முனியம்மாள் க/பெ.செல்லையா என்பரை கூவி அழைத்தேன். மேற்படி முனியம்மாள் என்பவரும், அவருடைய கணவர் செல்லையா என்பவரும் மற்றும் ஒரு வயதான மூதாட்டியும் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். அவர்கள் வழக்கறிஞர் அமர்த்தியுள்ளார்களா என

சார்பு நீதிபதி ஐயா அவர்கள் கேட்ட போது தகுந்த பதில் அளிக்காததால் மற்ற வழக்கு கட்டுகள் அழைக்கப்பட வேண்டியதிருந்ததால் வழக்கை பாஸ்ஓவர் செய்துவிட்டு அவர்களை வெளியில் இருக்க அறிவுறுத்தி வெளியில் இருக்கவும், தான் மீண்டும் அழைப்பதாகவும் சார்பு நீதிபதி ஐயா அவர்கள் சொல்லி அவர்களை வெளியில் இருக்க சொன்னார். பின்பு மற்ற வழக்குகள் தொடர்ச்சியாக அழைக்கப் பட்டு சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளில் சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். அதன் பின்பு வாதங்கள் கேட்கப்பட வேண்டிய வழக்குகளில் வாதங்கள் கேட்கப்பட்டது. பின்பு, திறந்த நீதிமன்ற அலுவல்கள் பெரும்பகுதி முடிவுக்கு வந்த பொழுது மாலை 4.30 மணி போல் சார்பு நீதிபதி ஐயா அவர்கள் மறுபடியும் அ.வ.எண்.289/2019 வழக்கில் அழைக்கப்பட்ட பிரதிவாதி முனியம்மாளை மீண்டும் அழைக்க உத்தரவிட்டார். நான் அவரை மீண்டும் அழைத்தேன். அவரிடம் சார்பு நீதிபதி ஐயா அவர்கள் வழக்கறிஞர் அமர்த்த போகிறீர்களா எனக் கேட்டார். அதற்கு அவர் வழக்கறிஞர் அமர்த்த வசதி இல்லை எனச் சொன்னார். நீதிபதி ஐயா அவர்கள் இலவச வழக்கறிஞரை ஏற்பாடு செய்து தரவா எனக் கேட்டார். அதற்கு மேற்படி முனியம்மாள் தனக்கு இலவச வழக்கறிஞர் தேவையில்லை எனச் சொன்னார். தனக்காக, தன்னுடைய கணவர் வழக்கை நடத்துவார் எனச் சொன்னார். தனிநபருக்காக மற்றொரு தனிநபர் நீதிமன்ற அனுமதியின்றி வழக்கு நடத்த முடியாது என்ற விபரத்தை சார்பு நீதிபதி ஐயா அவர்கள் சொன்னார். அதன் பின்னிட்டும் மேற்படி முனியம்மாள் தான் ஏற்கனவே சொன்ன விபரங்களையே மறுபடியும் சொன்னார். அவர் தன் கையோடு தட்டச்சு செய்து கொண்டு வந்திருந்த பேப்பரை நீதிபதி ஐயா அவர்களிடம் கொடுத்து இதை விசாரித்து முடிவு செய்து கொள்ளுங்கள். இனிமேல் எங்களால் கோர்ட்டிற்கு வர முடியாது, வக்கீல் வைத்து வாதாட முடியாது எனச் சொன்னார். அதன் பின்பு நீதிபதி ஐயா அவர்கள் வழக்கு நடைமுறைகளை எடுத்து சொன்ன பின்னாலும் மேற்படி முனியம்மாள் அதை கேட்டுக் கொள்ளாமல் அவர் சொன்ன விபரங்களையே மறுபடி மறுபடி சொல்லி தான் கொடுத்த மனு ஒன்றே போதும் அதை வைத்தே முடிவு செய்து கொள்ளுங்கள் எனச் சொன்னார். பலமுறை இலவச

வழக்கறிஞர் வைத்து தரவா என நீதிபதி ஐயா அவர்கள் கேட்ட பின்பும் பிரதிவாதி முனியம்மாள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. தனக்கு வக்கீல் தேவையில்லை. தான் வக்கீல் வைத்து வாதாடப் போவதில்லை எனச் சொன்னார். அந்த விபரத்தை எழுதித் தரச் சொன்ன போது முனியம்மாளும், அவருடை கணவர் செல்லையாவும் நாங்கள் எதற்கு எழுதித் தர வேண்டும், எழுதித் தர முடியாது எனச் சொல்லிவிட்டு நீதிமன்றத்திலிருந்து வெளியே கிளம்பி போய்விட்டார்கள். இந்த விபரத்தை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் திரு.ஆனந்த் அவர்கள், வழக்கறிஞர் திரு. என்.அருணாசலம் அவர்கள், வழக்கறிஞர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள், வழக்கறிஞர் திரு.பி.இன்பராஜ் மற்றும் சில வழக்கறிஞர்களும் நேரில் பார்த்தார்கள். இந்த விபரத்திற்கு நான் இந்த வாக்கு மூலத்தை அளிக்கிறேன்.